# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**

இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்,
தரமணி, சென்னை– 113

வலைதளம் : www.ulakaththamizh.in/ மின்னஞ்சல் : iitstaramani@gmail.com
தொலைபேசி : 22542992, 22542781


---

## 2023-24 கல்வியாண்டு

## மாணவர் சேர்க்கை விவரக் கையேடு

- **தமிழ் முதுகலை பட்டப் படிப்பு (M.A. Tamil)**
- **ஐந்தாண்டு ஒருங்கிணைந்த முதுகலைப் பட்டப்படிப்பு (Five-Year Integrated P.G. M.A. Tamil)**

## தோற்றம்

உலகளாவிய நிலையில் அனைத்து வகையிலும் தமிழ் ஆய்வினையும் ஒத்த துறைகளில் ஆர்வமுடைய உலகெங்கணும் உள்ள தமிழ் அறிஞர்களையும் ஒருங்கிணைத்து ஒல்லும் வகையெல்லாம் தமிழ் ஆய்வினைத் தொடரும் நோக்கில் சென்னையில் 1968ஆம் ஆண்டு, சனவரித் திங்களில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் மேனாள் தமிழ்நாடு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் அறிவிப்பிற்கிணங்க 1970ஆம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது.

தமிழ் இலக்கியம் (ம) சுவடியியல் புலம், சமூகவியல், கலை (ம) பண்பாட்டுப் புலம், தமிழ்மொழி (ம) மொழியியல் புலம் மற்றும் அயல்நாட்டுத் தமிழர் புலம் ஆகிய புலங்களில் உயரிய பேராசிரியர்களைக் கொண்டு நிறுவனத்தில் தமிழ்ப் பல்கலைக் கழக ஏற்புடன் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## உள்கட்டமைப்பு வசதி / மாணவர் நலன்

- சிறந்த உட்கட்டமைப்புடன் கூடிய ஆய்வு நூலகம்
- இருபாலருக்கான தனித்தனி கட்டணமில்லா விடுதி வசதி
- பட்டியல் / பழங்குடி இனத்தவர் / பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான மத்திய, மாநில அரசுகளின் கல்வி உதவித்தொகை
- முதுகலைத் தமிழ் (15 மாணவர்கள்) பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு தெரிவின் அடிப்படையில் அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு சிறப்பு உதவித்தொகை மாதந்தோறும் ரூ.2000/-
- பட்டப்படிப்புடன் கூடுதலாக பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள் படிக்கும் வசதி
- ஆசிரியர் தகுதித்தேர்வு (TET) மற்றும் பல்கலைக்கழக நல்கைக் குழுவால் வழங்கப்படும் தேசிய தகுதித்தேர்வு/மாநிலத் தகுதித் தேர்விற்கான இலவசப் பயிற்சி (NET/SET/CSIR/ICHR)
- நாட்டு நலப்பணித் திட்டம்

## விதிமுறைகள்

- அனைத்துப் பாடப்பிரிவுகளுக்கும் பயிற்றுமொழி தமிழாகும்.

## ஐந்தாண்டு ஒருங்கிணைந்த தமிழ் முதுகலை (Five Years Integrated Tamil P.G.)

- பள்ளிக் கல்வித்துறையால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் 10, +2 கல்விப் படிநிலைகளில் தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும். மொழிப் பாடமாகத் தமிழ் படித்திருக்க வேண்டும்.
- இப்பட்டப்படிப்புப் பயிலும் மாணவர்கள் மூன்றாண்டு இறுதியில் விருப்பத்தின் அடிப்படையில் இளங்கலைப் பட்டத்துடன் வெளியேறலாம்.
- மொத்த சேர்க்கைக்கான இடங்கள் 40.

## தமிழ் முதுகலை (M.A. Tamil)

- உயர்கல்வித் துறை மற்றும் பல்கலைக்கழக நல்கைக்குழு விதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் 10+2+3 கல்விப் படிநிலைகளில் தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும். இளங்கலை/இளமறிவியல் படிப்புகளில் மொழிப் பாடமாகத் தமிழ்ப் படித்திருக்க வேண்டும்.
- இளநிலைப் படிப்பில் ஐந்தாம் பருவத்தில் தேர்ச்சி பெற்று, ஆறாம் பருவ முடிவுகளுக்காகக் காத்திருக்கும் மாணவர்கள் விண்ணப்பம் செய்யலாம். ஒட்டு மொத்த தேர்ச்சி மதிப்பெண் பட்டியல் அளித்த பின்னரே சேர்க்கை உறுதி செய்யப்படும்.
- நுழைவுத் தேர்வின் தகுதி அடிப்படையிலும் தமிழக அரசு அறிவித்துள்ள இனவாரிச் சுழற்சி அடிப்படையிலும் சேர்க்கை நடைபெறும். நுழைவுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள், இளநிலை படிப்புகளில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலும் பல்கலைக்கழக நல்கைக் குழுவின் (UGC) விதிமுறைகளின்படி துறையிலுள்ள இடங்களைப் பொறுத்து மாணவர்கள் சேர்க்கை நடைபெறும்.
- நுழைவுத் தேர்வு நடைபெறும் நாள், நேரம், இடம் ஆகியன தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பின்னர் தெரிவிக்கப்படும்.
- மொத்த சேர்க்கைக்கான இடங்கள் 14.

மேற்கண்ட படிப்புகளில் மாணவர் சேர்க்கை எண்ணிக்கையைப் பொறுத்து ஒரு குறிப்பிட்ட பாடத்தை நடத்துவது குறித்துப் பல்கலைக்கழகம் முடிவெடுக்கும்.

**மேற்கண்ட படிப்புகளுக்கு வயது வரம்பு :** 01.07.2023 அன்று ஒருங்கிணைந்த ஐந்தாண்டு முதுகலைப் பட்டப் படிப்பிற்கு 21 வயதுக்குட்பட்டவர்களாகவும் மற்றும் முதுலை பட்டப் படிப்பிற்கு 27 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும் மேலும் SC/SCA/ST/BC/BCM/MBC/DNC பிரிவினருக்கு வயது வரம்பில் 3 ஆண்டுகள் தளர்வும், மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு 5 ஆண்டுகள் தளர்வும் அளிக்கப்படும்.

## விண்ணப்பக் கட்டணம்

| பிரிவு | ஒருங்கிணைந்த முதுகலை / முதுகலை |
|---|---|
| பொதுப் பிரிவு | ரூ. 500/- |
| ஆதிதிராவிடர்/பழங்குடியினர் (சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) | ரூ.250/- |
| மாற்றுத்திறனாளி மற்றும் மூன்றாம் பாலினத்தவர் (சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) | ரூ.100/- |

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வழி பட்டம் பயில விரும்புவோர் :**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வழி பட்டம் பயில விரும்புவோர் www.tamiluniversity.ac.in என்ற **இணையதள முகவரியில் உரிய விண்ணப்பக் கட்டணத்தை செலுத்தி** விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விண்ணப்பத்தினை அஞ்சல் வழியாகப் பெற விரும்புவோர் **"Registrar, Tamil University, Thanjavur"**, எனும் பெயரில் உரிய விண்ணப்பக் கட்டணத்தை வங்கி வரைவோலையாகப் பெற்று ரூ.50/-க்கான அஞ்சல் தலை ஒட்டிய தன்முகவரியிட்ட உறை இணைத்து, **"பதிவாளர், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613010"** என்ற முகவரிக்கு அஞ்சல் வழியாக அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

பதிவிறக்கம் செய்த விண்ணப்பம் அல்லது அஞ்சல் வழியாகப் பெறப் பெற்ற அசல் விண்ணப்பத்துடன் சான்றொப்பமிடப்பட்ட நகல்களான கல்வித் தகுதிச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், மாற்றுச் சான்றிதழ் மற்றும் பிற சான்றிதழ்கள்

ஏதேனும் தேவையிருப்பின் அவற்றின் ஒளிப்பட நகலைச் சொந்தக் கையொப்பம் இட்டு இணைத்து **இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை-600 113** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். அசல் சான்றிதழ்கள் விண்ணப்பத்துடன் கண்டிப்பாக இணைத்து அனுப்புதல் கூடாது.

மேற்குறித்த படிப்புகளில் சேர விரும்பும் மாணவர்கள் விண்ணப்பங்களை தொடர்புக் கைபேசி எண் உட்பட அனைத்து விவரங்களையும் முழுமையாக நிறைவு செய்து இறுதி நாளுக்கு முன்பாக நேரிலோ அல்லது அஞ்சல் வழியாகவோ

ஒருங்கிணைந்த முதுகலைப் பட்டப்படிப்புக்கு - 09.06.2023 அன்று அல்லது அதற்கு முன்பாகவும்

முதுகலை படிப்புக்கு – 20.06.2023 அன்று அல்லது அதற்கு முன்பாகவும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**இயக்குநர் (கூ.பொ.)**

## கல்விக்கட்டண விவரம்

| வ. எண் | கட்டண விவரம் | ஒருங்கிணைந்த முதுகலை தமிழ் | முதுகலை தமிழ் |
|---|---|---|---|
| 1. | சேர்க்கைக் கட்டணம் | 100 | 100 |
| 2. | சிறப்புக் கட்டணம் | 500 | 500 |
| 3. | பயிற்றுக் கட்டணம் | 1500 பருவக் கட்டணம் | 2000 பருவக் கட்டணம் |
| 4. | நூலகக் கட்டணம் | 200 | 250 |
| 5. | கணிப்பொறிக் கட்டணம் | 200 | 200 |
| 6. | பயிற்சிக் கட்டணம் | 500 | 500 |
| 7. | விளையாட்டுப்போட்டி கட்டணம் | 100 | 100 |
| 8. | இணையதள/அடையாள அட்டை | 100 | 150 |
| 9. | காப்புத்தொகை | 500 | 500 |
| 10. | பிற பல்கலைக்கழகப் பட்டங்களை ஏற்பதற்கான கட்டணம் | -- | 200 |
| | **மொத்தம்** | 3700 | 4500 |